REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: ஐப்பசி 19உ வியாழன் (4—11—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 20உ வெள்ளி (5—11—54) [இதழ் 123

## பைத்தியத்திற்குப் புது மருந்து

சிகாகோ, அக். 29—

அமெரிக்க டாக்டர்களான ராபர்ட், கோசி, டேவிட் வில்லியம்ஸ், வால்டர் ராப்பயோர்ட் ஆகியோர் கொண்ட குழுவினர், இந்தியாவில் கிடைக்கும் மூலிகைகளைக்கொண்டு பைத்தியம் பிடித்தோரைக் குணப்படுத்த மருந்து ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்களாம்.

இந்த மருந்து அளிக்கப்பட்டவர்களில் 80 சதவீதத்தினருக்குக் குணமேற்பட்டுள்ளதாம். எட்டு பேர் குணமடைந்து வெளியில் அனுப்பப்பட்டார்கள் என்றும், 20 பேர் ஒருசில நாட்களில் மருத்துவ மனையிலிருந்து வெளியே அனுப்பப்படுவார்கள் என்றும் தெரிகிறது.

# ஜனதிபதி ஐசனேவர் திகைப்பு!

## அமெரிக்க மக்கள் சபைத் தேர்தலில் குடியரசுக் கட்சி படுதோல்வி!

## ராஜ்யங்களின் கவர்னர்கள் தேர்தலிலும் ஜனநாயகக்கட்சிக்கே பெரும்பான்மை!

### அமெரிக்க அரசியலில் புதிய கட்டம்!

அமெரிக்கக் காங்கிரஸ் தேர்தல்களில் ஜனதிபதி ஐசனேவரின் கட்சியான குடியரசுக் கட்சி பெருத்த தோல்வியைக் கண்டிருக்கிறது.

செனேட் என்ற மேல் சபையில், ஐசனேவர் கட்சியினர் பெரும்பான்மையினராயிருந்த நிலை மாறி, இப்போது, எதிர்க் கட்சியிலிருந்த ஜனநாயகக் கட்சியினர் பெரும்பான்மை இடங்களைப் பிடித்துள்ளனர்.

இந்த செனேட் சபையின் ஆதரவின்றி ஜனதிபதி ஐசனேவரின் நிர்வாகத் திட்டங்கள் எதுவுமே நிறைவேற முடியாது. சுருங்கக் கூறின், ஜனதிபதி ஐசனேவர் குடியரசுக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தபோதிலும், தனது கட்சியின் திட்டங்களை நிறைவேற்ற இயலாது போவது மட்டுமின்றி, ஜனநாயகக் கட்சியின் திட்டங்களை நிறைவேற்ற வேண்டியதோர் அவல நிலையும் ஏற்படும்.

இப்போது செனேட் சபையில் ஐசனேவர் கட்சியினர் 46 இடங்களையும், ஜனநாயகக் கட்சியினர் 47 இடங்களையும் பிடித்துள்ளனர். சுயேச்சைவாதி ஒருவரும் வெற்றி பெற்றிருக்கிறார். இன்னும் நியூஜேர்சி, ஓர்கன் எனும் இரு மாநிலங்களின் தேர்தல் முடிவுகள் வெளிவரவில்லை. அம்முடிவுகளைப் பொறுத்து ஐசனேவர், ஜனநாயகக் கட்சியினரின் கைப்பொம்மையாகிற நிலை உருவாகவிருக்கிறது.

அமெரிக்க சட்டசபைத் தேர்தலிலும் ஐசனேவர் கட்சி படுதோல்வி கண்டிருக்கிறது. ஐசனேவரின் கட்சியான குடியரசுக் கட்சியினர் 198 இடங்களை மட்டுமே பெற்றுள்ளனர்; ஆனல், ஜனநாயகக் கட்சியினர் 230 இடங்களைப் பிடித்து பெரும்பான்மை வெற்றி பெற்றுள்ளனர். இன்னும் ஏழு இடங்களின் தேர்தல் முடிவுகள் வரவில்லை.

அம்முடிவுகள் எல்லாம்கூட, ஐசனேவருக்கு சாதகமாகக் கிடைத்தபோதிலும், ஜனநாயகக் கட்சியினரே பெரும்பான்மையினராயிருப்பர்.

அமெரிக்காவில் உள்ள 48 ராஜ்யங்களுக்கான கவர்னர் தேர்தலிலும்கூட ஐசனேவர் கட்சி தோல்வியையே அணைத்துக் கொண்டிருக்கிறது. 26 மாநிலங்களில் கவர்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்கள் ஜனநாயகக் கட்சியினர்தாம்.

நியூயார்க் மாநிலத்தின் கவர்னர்கூட ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவரேயாகும். 12 வருடங்களாக நியூயார்க் ராஜ்யத்தில், குடியரசுக் கட்சியினரே ஆதிக்கம் செலுத்தினர். இன்று, ஆவரேல் ஹாரிமன் என்பவர் அந்த நிலையை மாற்றி ஜனநாயகக் கட்சி சார்பில் வெற்றி பெற்றிருக்கிறார். அவரை எதிர்த்து நின்ற செனட்டர் இர்விங் ஐவ்ஸ் என்ற குடியரசுக் கட்சிக்காரர் தம் வாழ்நாளிலேயே தோல்வி முகத்தைக் கண்டதில்லையாம்.

இந்தத் தேர்தல் முடிவுகள் பொதுவாக உலகப் போக்கிலும் குறிப்பாக அமெரிக்காவிலும் ஏதேனும் பெரிய மாறுதல்களை உண்டாக்கக் கூடுமென எதிர்பார்க்கப்படுவது இயற்கைதானே?

★

### ஸ்டீவன்சன் மகிழ்ச்சி!

அமெரிக்கப் பாராளுமன்றத்திற்கான தேர்தல்களில் ஜனநாயகக் கட்சியினர் பெற்றுவரும் வெற்றிகளைக் கண்டு தான் மகிழ்ச்சி அடைவதாகவும், ஜனநாயகக் கட்சி அபேட்சகர்கள் நல்ல முறையில் போட்டியிட்டமைப் பற்றிப் பெருமைப்படுவதாகவும் ஜனநாயகக் கட்சித் தலைவரான அடிலாய் ஸ்டீவென்சன் கூறியுள்ளார்.

இவர் கடந்த ஜனதிபதி தேர்தலில் ஐசன்ஹோவரை எதிர்த்துப் போட்டியிட்டு தோல்வி அடைந்தவர் என்பது நினைவில் இருக்கலாம்.

★

## தேர்தல் முடிவு திகைப்பூட்டுகிறதாம்

### எதிர்க் கட்சியின் ஒத்துழைப்பை ஐசனேவர் கோருவார்

இப்போது நடைபெறும் தேர்தல்களின் முடிவு கண்டு ஐசன்ஹோவர் திகைப்படைகிறார் என்று கூறப்படுகிறது.

அமெரிக்கப் பாராளுமன்ற கீழ் சபையில் உள்ள ஜனநாயகக் கட்சித் தலைவர்களை அழைத்து அவர்கள் ஒத்துழைப்பைப் பெறவும், புதிய காங்கிரசில் தனது சர்க்கார் நிறைவேற்ற இருக்கும் சட்டங்களைப் பற்றியும் விவாதிக்கப்போவதாக ஐசன்ஹோவர் மேலும் கூறியுள்ளார்.

இத்தேர்தலுக்கான பிரச்சாரம் செய்யும்போது ஜனநாயகக் கட்சியினர்வெற்றி பெற்றால், சர்க்காரின் நிர்வாகத்திற்கும், சட்ட சபைக்கும் இடையே மறைமுகப் போர் நடைபெறுமென்று கூறியதை பத்திரிகை நிருபர்கள் சுட்டிக்காட்டி கேட்டபோது, 'தான் கூறியது கடுமையான வார்த்தைதான்,' என்பதை உணர்ந்தே, தான் அவ்வாறு கூறியதாக பதில் அளித்தார்.

## ஐசனேவர் மீண்டும் தேர்தலில் போட்டியிடமாட்டார்

அமெரிக்க ஜனதிபதி ஐசன்ஹோவர் மீண்டும் ஜனதிபதி தேர்தலுக்குப் போட்டியிடமாட்டார் என்று தெரிகிறது.

இப்போது அமெரிக்கப் பாராளுமன்றத்தின் இரு சபைகளில் மூன்றில் ஒரு பங்கு ஸ்தானங்களுக்கு தேர்தல்கள் ஏறக்குறைய முடிவடைந்துவிட்டன.

கீழ்சபையில், இப்போது அமெரிக்காவின் முக்கிய எதிர்க்கட்சியினரான ஜனநாயகக் கட்சியினர் பெருவாரியான இடங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

மேல்சபையிலும் இதே நிலை ஏற்பட்டால், குடியரசுக் கட்சியின் அபேட்சகரான ஐசன்ஹோவரின் நிர்வாகத்தை அமெரிக்க மக்கள் விரும்பவில்லை எனலாம்.

அமெரிக்க அரசியல் அமைப்பின்படி ஜனதிபதியின் நிர்வாகம், பாராளுமன்றத்தின் ஒத்துழைப்பு இல்லாது சுமுகமாக நடைபெற முடியாது.

ஜனதிபதி ஐசன்ஹோவரின் பதவி 1956-ல் முடிவடைகிறது. அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிட மாட்டார் என்று பலர் கருதுகின்றனராம்.

## சீனப் பிரதமர் பதவி

### சீக்கிரமே மாற்றமிருக்கும்?

செஞ்சீன அரசாங்கத்தின் பிரதம மந்திரி பதவியில், அண்மையில் மாறுதல் இருக்கலாம் என தகவல் கிடைத்துள்ளதாம்.

தோழர் சௌ-என்-லாய் இப்போது பிரதம மந்திரியாக இருந்து வருகிறார்.

சீனவின் அரசியல் முக்கியத்துவப்படி பார்த்தால் சௌ-என்-லாய் நான்காவது இடத்தில்தான் இருக்கிறார்.

மா-சே-துங்,—சீனக் குடியரசுத் தலைவர் — முதல் இடம்; லியோ-ஷா-சி தேசீய மக்கள் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியின் தலைவர்—இரண்டாவது இடம்; ஜெனரல் சூ-டே—சீனக் குடியரசின் துணைத் தலைவர்—மூன்றாவது இடம்; இவர்களுக்கு அடுத்தாற்போன்றுதான் பிரதம மந்திரி பதவி வகிப்பவர் முக்கியத்துவம் பெறுகிறார்—சீன அரசியலின்படி.

பிரதம மந்திரி பதவியில் ஒரு மாற்றம் ஏன் தேவைப்படுகிறது என்பதற்கான நேரடி காரணங்கள் இன்னமும் தெரிந்துகொள்ள முடியாதனவாகவே உள்ளன என்றும் சொல்லப்படுகிறது.

## காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மாநாடு!

### ஜனவரியில் நடைபெறும்

லண்டன், நவ. 4—

பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளின் முதல் அமைச்சர்கள் 1955-ஜனவரி 31-ந் தேதியன்று லண்டனில் கூடிப் பேசுவார்கள் என்று தெரிகிறது.

இந்த மாநாடு கூட்டுவதுபற்றி சம்மந்தப்பட்ட நாடுகளுடன் ஆலோசனைகள் நடைபெற்றுவிட்டன என்றும், இதுபற்றிய அறிவிப்பு ஒன்றை சர்ச்சில் இன்று வெளியிடுவார் என்றும் தெரிகிறது.

### சமாதான காரியங்களுக்கு அணு சக்தி!

#### சர்வதேச கழகம் காண அமெரிக்காவின் புதிய திட்டம்

அணுசக்தியை சமாதான காரியங்களுக்காக உபயோகிப்பதற்கான சர்வதேச கழகம் ஒன்றை நிறுவுவது பற்றி அமெரிக்காவின் புதிய திட்டமொன்று, சோவியத் ரஷ்யாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக ஜனதிபதி ஐக் தெரிவித்துள்ளார்.

## ஆசியப் பிரதமர்கள் மாநாடு

### கலந்துகொள்ள பாக். பிரதமர் ஒப்பம்

கொழும்பு நாடுகளின் மாநாடொன்றில் கலந்துகொள்ள பாகிஸ்தான் பிரதமர் முகம்மது அலி ஒப்புதல் தந்துவிட்டதாகத் தெரிகிறது.

மூன்று நாட்கள் நடைபெறும் அந்த மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் முக்கியமான இடம் பெற்றிருப்பது, இந்தியப் பிரதமர் பண்டித நேரு அறிவித்த ஆசிய-ஆப்பிரிக்க மாநாடு பற்றியதாகும்.

ஆசிய - ஆப்பிரிக்க மாநாடு ஒன்றை எங்கு எப்பொழுது கூட்டுவது என்பதுபற்றி மாநாட்டில் விவாதிக்கப்படும் எனவும் தெரிய வருகிறது.

## அகதிகளுக்கு ரூ. 5 கோடி நஷ்டஈடு!

இந்திய சர்க்கார் மேற்கு பாகிஸ்தானிலிருந்து வெளியேறி வந்துவிட்ட அகதிகளுக்கு இதுவரை அவர்கள் விட்டுவந்த சொத்துக்களுக்காக ஐந்து கோடியே 13 லட்சம் ரூபாய் நஷ்டஈடு கொடுத்திருக்கிறதாம்.

## அகில இந்திய நாடக விழா

### தென் இந்திய நடிகர் சங்கக் கண்டனம்

"தென்னிந்திய நடிகர் சங்கம், நாடகக் கழகம் ஆகிய பிரதிநிதித்துவம் பெற்ற கலை நிறுவனங்களை அலட்சியம் செய்து, இப்போது நடைபெறும் பிரதேச நாடக விழா, தமிழ் நாடகக் கலைக்குக் கௌரவமளிப்பதாக இல்லையென்றும், இது சம்பந்தமாக 'நாடகக் கழகம்' விடுத்துள்ள அறிக்கையை வரவேற்பதுடன், தென்னிந்திய நடிகர்களின் சார்பில், சங்கம் தனது வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறது."

என்று, தென்னிந்திய நடிகர் சங்கம், 1—11—54ல் நடத்திய மேற்படி சங்கப் பேரவைக் கூட்டத்தில், தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

## இலங்கை இந்தியத் தூதுவர் தேசாய்

### நவ. 6-ந் தேதி பதவியை விட்டுச் செல்கிறார்

கொழும்பு, நவ. 3—

இலங்கை இந்தியத் தூதுவராகப் பணியாற்றியவரான தேசாய் இம்மாதம் 6-ந் தேதி பதவியை விட்டுச் செல்கிறார் என்று தெரிகிறது.

இவரை இலங்கை வானெலியின் சார்பில் பேட்டி கண்டபோது, இலங்கை இந்தியர் நிலையில் இதுவரை காணப்படாத நல்ல சூழ்நிலை நிலவுகிறது என்று அவர் கூறினார்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்:அண்ணதுரை
சென்னை 4—11—1954 வியாழன்

# சட்டக் கல்லூரி மாணவர் விடுதி

★

சென்னை நகரில் நடைபெற்றுவரும் கல்லூரிகள் அனைத்துக்கும், ஆங்காங்கு படிக்கும் மாணவர்களுக்குத் தனித்தனியான உறையுள், உணவு விடுதி அமைப்புகள் உள்ளன. அத்தகைய மாணவ விடுதிகளின் நன்மை தீமைகளை, ஆராய்ந்து பார்த்துத்தான் கண்டறிய வேண்டுமென்பதில்லை. கல்லூரியில் பயிற்சி பெறும் காலம் போக, எஞ்சிய ஓய்வு பெற வேண்டிய நேரத்தில் உடல் நலம் பேணும் நல்ல உறையுள்ளும், சத்தான உணவு தரப்படும் உணவு ஏற்பாடும் கல்லூரி மாணவர்களுக்கு மிக மிக முக்கியமானது என்பதை அனைவரும் ஒப்புவர். காலாகாலத்தில் நூற்களைப் பயில வேண்டியதும் மாணவப் பருவத்தின் நீங்காக் கடமையாகும். அதற்கான விளக்கொளி அமைப்பும், சிறந்த இட வசதியும் மாணவர்களுக்கு இருத்தல் வேண்டும் என்பதும் கட்டாயமாகும். இவ்வளவும் கல்லூரி மாணவர்களுக்கு இருந்து தீரவேண்டிய இன்றியமையாதத் தேவைகளே அல்லாது, வெறும் ஆடம்பர சாதனங்கள் அல்ல என்பதை அனைவரும் அறிவர்.

கல்வி பெறுவது ஒன்றையே தங்கள் குறிக்கோளாகக் கொண்டிருப்பார்களானால், மேற்குறித்த வசதியான புறத் தேவைகளை ஒரு பொருட்டாகக்கொள்ள மாட்டார்கள்—கொள்ளக்கூடாது என வரட்டு வேதாந்தம் பேசும் வக்கிர புத்தியினர் நமது நாட்டுப் பொது வாழ்வில் உண்டு என்பதை நாம் அறிவோம். அவர்கள், வறுமையிற்செம்மையும், செம்மையில் வறுமையும் இருக்க வேண்டியதின் கட்டாயத்தை வலியுறுத்திப் பேசி வருவதையும் நாம் அறிவோம். 'எளிய வாழ்க்கை—உயர்ந்த சிந்தனை' என்று 'கங்காதரா மாண்டாயோ, என அன்னார் ஒப்பாரி வைத்து வருவதும் நாம் கேட்காதது அல்ல.

வீதி விளக்கொளியில் படித்தும், கிழிந்த ஆடை உடுத்தியும், எண்ணெய் காணாத் தலையுடன் திரிந்தும், உண்டும் உண்ணாததுமாகக் காலங் கழித்தும், எட்டடி குச்சிக்குள் கால் கைகளை முடக்கி வாழ்ந்தும், பட்டப் படிப்புகளைக் கற்றுத் தேறி, கை நிறைய பை நிறைய பொன் பெற்று, புகழ்பட வாழ்ந்த இரண்டொரு உஞ்சி விருத்திகளையும், தங்கள் பிழையுடை கோமாளித்தனத்துக்கு எடுத்துக்காட்டுகளாகவும் காட்டி, தம் கட்சியை நிலைநாட்ட முந்துவர். இப்படி, அவர்கள் வாதிடக் கிளம்பும் அதே நேரத்தில், சாதாரண மக்கள் வாழ்க்கைத்தரம் உயர வேண்டியதின் அவசியத்தை எடுத்துக் கூறியும், அதற்காகவே தாங்கள் பட்டுவரும் பாட்டை விளக்கியும் விரிவுரையும் புரிவர். தங்கள் பேச்சுகளில் நிரம்பிக்கிடக்கும் முரண்பாட்டை அவர்கள் கருதிப் பார்த்தால், அவர்களுக்கே வெட்கம் தோன்றுமென்பதில் ஐயமில்லை.

கல்லூரி மாணவர்களுக்கு என அமைக்கப்பட்டுள்ள உறையுள் உணவு விடுதியில் தங்கி கற்கும் மாணவர்களுக்கு, கல்லூரிப் படிப்பில் முழு கருத்தையும் செலுத்திக் கற்பதற்கு வாய்ப்பு இருப்பதுபோல, பிற இடங்களில் தங்கிக் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இருக்க முடியாது என்பது வெளிப்படை. கல்லூரி விடுதிகளில் காணப்பெறும் அமைதி, குழந்தை குட்டிகள் மலிந்துள்ள குடும்ப விடுகளில் காண்பது கடினம். கல்வி கற்பதற்கு முக்கியமாகத் தேவைப்படும் இந்தஅமைதியின்மையின் காரணமாக, பிறவிடங்களில் தங்கி கற்றுவரும் கல்லூரி மாணவர்களின் கல்வி, கெடுவதற்கும் தரம் குறைவதற்கும் இடமுண்டு.

மேலும், மாணவர்கள் கல்லூரிகளில் தாம் பெறும் பாடப் பயிற்சியை, விடுதிகளில் தங்கியிருந்தால் தங்களுடன் கல்வி பயிலும் மாணவர்களுடன் ஒன்றி உரையாடி, விவாதித்து, சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளும் வாய்ப்பும் கிட்டும்.

விடுதிகளிலன்றி, தனியாக வெளியிடங்களில் மாணவர்கள் தங்க நேர்ந்தால் இந்த அரிய வாய்ப்பு கிடைக்காமற்போகிறது. அப்படியே மாணவர்கள் அந்த வாய்ப்பினை உண்டுபண்ணிக் கொள்வதாயின், ஒரு மாணவர் தங்கியிருக்கும் இடத்திற்கு இன்னுமொரு மாணவர் சென்று திரும்பும் போக்குவரத்துச் செலவு, ஏழை மாணவர்களால் செய்யப்பட முடியாத ஒன்றாகக்கூட இருக்கும்.

அதுவுமன்றி, சொந்த உறவுடன் சேர்ந்தில்லாது, பிற இடங்களில் தங்கி கற்பதின் பலனாக, சில வெளியூர் மாணவர்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகிவிடுவதோடு, கல்வியும் அரைகுறையாக முடிந்தும் விடுகிறது. பலவித பழிச்சொற்களுக்கும் அம்மாணவர்கள் பலியாக வேண்டியும் ஏற்படுகிறது. அதனால், மாணவர்களின் படிப்பும் கெட்டு செலவழித்த பணமும் பாழாகி, பெற்றோர்களின் வெறுப்புக்கும் மாணவர்கள் இரையாக வேண்டியதாகிறது.

மாணவர்களுக்கென உள்ள உறையுள் உணவு விடுதியில், கல்லூரி மாணவர்கள் தங்குவதினல், கூடுமானவரை மேற்குறிப்பிட்ட குறைபாடுகளுக்கு இடமிருக்காது என்பது நிச்சயம். ஏதோ, வெளிச் சேர்க்கையின் காரணமாக ஒரோர் வகையில் தவறிழைக்க நினைக்கும் மாணவர்கள்கூட, உடனுள்ள மற்ற மாணவர்களின் நகைப்பிற்கஞ்சி, அந்நினைப்பை மாற்றிக்கொண்டு நல்வழியை நாடவும் வாய்ப்புண்டாகும்.

நித்தியப்படி வாழ்க்கையில் ஒவ்வொரு மாணவரிடத்திலும் கட்டாயமாக இருந்து தீர வேண்டிய ஒழுங்கும் கட்டுப்பாடும், கால்கொண்டு வளர்ந்து வளம் பெறுவதற்கான அருமையான இடம் மாணவர் விடுதிதான் என்பதை மறுப்பவர் இருக்க முடியாது. மாணவப் பருவத்தில், கற்றுக் கொள்ளும் ஒழுங்கும் கட்டுப்பாடும், அப்பருவத்தோடு மாணவர்களை விட்டு நீங்கி விடுவதல்ல. மாணவர்களின் பிற்கால வாழ்க்கையிலும், அவ்விரண்டும் பிரதிபலிக்கக்கூடியவைகளாகும். எனவே, கல்லூரி மாணவர்களுக்கு இன்றியமையாதத் தேவையாக இருப்பது சிறந்த உறையுள் உணவு விடுதியேயாகும்.

அத்தகைய ஒரு அமைப்பு, சென்னை சட்டக் கல்லூரிக்குக் கிடையாது. அத்தகைய அமைப்பு ஒன்று தேவை என்பது மேற்படி கல்லூரி மாணவர்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். முதல் அமைச்சர் காமராசர் காலத்திலாவது, அப்பழங் கோரிக்கைக்கு விமோசனம் ஏற்பட வேண்டும் என்பதே நமது விருப்பமும்—வேண்டுதலும் ஆகும்.

சட்டக் கல்லூரி மாணவர்களுக்கான ஒரு இடைக்கால விடுதி ஏற்பாட்டிற்காக ஒரு வாடகைக் கட்டிடத்தை கண்டறிந்து கூற மேற்படி மாணவர்கள் முன்வர வேண்டும் என அரசியலார் அறிவிப்பு ஒன்று, கல்லூரி அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டிருக்கிறதாம். இந்த அறிவிப்பு, நமக்குப் பெரும் நகைப்பையே தருகிறது. சென்னை நகரில் எங்கெங்கு குடியில்லாத கட்டிடம் இருக்கிறது, அதன் உரிமையாளர்கள் எவர், அக்கட்டிடங்களுக்கு அவர்கள் கேட்கும் குடிக்கூலி எவ்வளவு என்பதை எல்லாம் விசாரித்தறிந்து அரசியலாருக்கு அறிவிக்கும் பொறுப்பை, சட்டக் கல்லூரி மாணவர்களிடம் ஒப்படைப்பதானல், குடிக்கூலி கட்டுப்பாடு துறை என ஒரு துறையும், அதை நிர்வகிக்க ஒரு அமைச்சரும், மராமத்துத் துறை என ஒரு துறையும், அதைக் கண்காணித்து நடத்திவர ஒரு அமைச்சரும், சென்னை அரசியலாரிடம் இடம்பெற்று இருப்பது எதற்கு எனக் கேட்கத் தோன்றுகிறது. சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதிக்கான கட்டிடத்தை அமைத்துத் தர வேண்டியது, அத்துறை அமைச்சர்களின் கடமை அல்லவா? அக்கடமையை சட்டக் கல்லூரி மாணவர்களிடமே ஒப்படைக்க முன்வரும் நிலையில், இருக்கும்பொழுது, அத்துறைகள்தான் எதற்கு - அதற்கென அமைச்சர்கள்தான் எதற்கு இருப்பது?

சட்டக் கல்லூரி மாணவர்களின் கோரிக்கையைத் தட்டிக் கழிக்கும் நோக்குடன் கிளம்பியுள்ள மேற்படி அறிவிப்பை உடனடியாகத் திரும்பப்பெற்று, மேற்படி மாணவர்களின் விருப்பத்தை உடனடியாக நிறைவேற்றி வைக்க, சென்னை அரசியலார் முன்வர வேண்டுமென வலியுறுத்திக் கூறுகிறோம்.

# இந்திய அரசியல் சட்டத்தை மேலும் திருத்த முயற்சி!

## தேவைப்படும் சட்டமியற்றவாம்!

**இந்திய அரசியல் சட்டத்தின் 31-வது பிரிவை திருத்தியமைப்பதற்கான மசோதா சபையின் அடுத்த கூட்டத்தில் நிச்சயமாகக் கொண்டுவரப்படும் எனத் தெரிகிறது.**

இந்திய அரசாங்கம் அங்கீகரித்துள்ள நகல் மசோதாவை, எல்லா மாநில முதன் மந்திரிகளுக்கும், சீனாவிற்குச் செல்லுமுன் பண்டித நேரு அனுப்பி வைத்திருந்தார்.

மசோதா பற்றிய தங்கள் தங்கள் கருத்துக்களை அநேகமாக எல்லா மாநில முதன் மந்திரிகளும் தெரிவித்துவிட்டபோதிலும் அவர்கள் எல்லஆம், வருகிற நவம்பர் 8-ல், தேசீய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் கலந்துகொள்ள புதுடில்லி வரும்போது, பிரதமர் நேருவுடன் இதுபற்றி நேரில் விவாதிப்பர் என்றும் தெரிகிறது.

**நில சீர்திருத்தம், குடிசை ஒழிப்பு, தனிப்பட்டவர் நடத்தும் தொழில்களைக் கட்டுப்படுத்துதல் போன்றவைகளை மாநில அரசாங்கங்கள் தடையின்றிச் செய்வதற்கு வசதி செய்து தருவதே மசோதாவின் நோக்கமாகும்.**

தனிப்பட்டவர் சொத்துக்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டால் கட்டாயமாக நஷ்டயீடு தரவேண்டுமென்று கூறுகிற சட்டத்தின் 31-வது பிரிவின், 2-ம் உட்பிரிவு தடங்கலாயிருக்கிறது. அத்தடங்கல் நீங்குவதற்கு மசோதா வழி செய்யும் எனச் சொல்லப்படுகிறது.

தனிப்பட்டவர் நடத்தும் தொழில்களை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்தவும், நிலச் சீர்திருத்தம், குடிசை ஒழிப்பு போன்றவை செய்யவும், மாநில அரசாங்கங்களுக்குப் போதுமான அதிகாரம் வேண்டும்; அதற்கொப்ப, அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற ஒரு கருத்து, அண்மையில் சில உயர் நீதி மன்றங்கள் தந்த முடிவுகளின் விளைவாக உருவாகியுள்ளது. அதன்படியேதான், இப்போதைய மசோதா உருவாக்கப்படுகிறது.

## தொழிற் கொள்கையில் மாற்றமில்லை!

**"தொழிலாளர் பற்றிய சர்க்கார் கொள்கையில் வெகு விரைவான முக்கிய மாறுதல்கள் ஏதும் சாத்தியமில்லை,"**

என்று மத்திய சர்க்கார் தொழிலாளர் மந்திரி கந்துபாய் தேசாய், பம்பாயில் நடைபெற்ற அகில இந்திய உற்பத்தியாளர் சங்க கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

தற்காலிக வேலையின்மை, அல்லது ஆட்குறைப்புக்கான நஷ்டஈடு கொடுப்பது பற்றிய சட்டத்தினல் பொருள் உற்பத்தி பாதிக்கப்படுவதாகத்தெரிந்தால், சர்க்கார், அந்தச் சட்டத்தைத் திருத்தியமைக்கும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இது சம்பந்தமாக தொழிலாளர், முதலாளிகள், சர்க்கார் ஆகிய மூன்று தரப்பினரும் ஒன்று சேர்ந்து, ஒரு 'இன்ஷ்யூரன்ஸ்' நிதியை ஏற்படுத்தலாம் என்ற சங்கத்தின் யோசனையைத் தாம் பரிசீலிப்பதாகவும் உறுதி மொழி கூறியிருக்கிறார்.

## தொழிலாளர் வீட்டு வசதி திட்டம்

ஏட்டுச் சுரைக்காயாகிறது!

**"மத்திய சர்க்கார் கொண்டு வந்துள்ள தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்தை மாநில சர்க்கார்களோ அல்லது தொழிலதிபர்களோ சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை; மத்திய சர்க்கார் இதற்கென்று ஒதுக்கியுள்ள ரூ. 40 கோடியில் இதுவரை ரூ. 16 கோடிதான் உபயோகப்படுத்தப் பட்டுள்ளது,"**

என்று, மத்திய சர்க்கார் தொழிலாளர் நல மந்திரி கந்துபாய் தேசாய் கூறியிருக்கிறார்.

தொழிலாளர் அல்லாத மத்திய தர வகுப்பாருக்கும், வீட்டு வசதித் திட்டத்தை விரிவாக்குவது பற்றி மத்திய சர்க்கார் யோசித்துக் கொண்டிருப்பதாகவும், இத்திட்டத்தைப் பற்றி அடுத்த சில தினங்களில் அரசாங்கம் அறிவிக்குமென்றும் அவர் கூறியுள்ளார்.

'வீட்டுப் பிரச்சினை தீர்க்கப்பட்டால், வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற மற்றைய பிரச்சினைகளும் தீர்ந்துவிடும்; ஆகவே, மாநில சர்க்கார்களும், ஸ்தல ஸ்தாபனங்களும் இத்திட்டத்திற்கான காரியங்களில் மத்திய சர்க்காருடன் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும்," என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கோவா தேசீயவாதிகள் ஆர்ப்பாட்டம்

நூற்றுக்கு மேற்பட்ட கோவா தேசீயவாதிகள் மத்திய பம்பாயிலுள்ள வியாபாரி ஒருவரின் அலுவலகத்தின் முன்னர் ஆர்ப்பாட்டம் செய்தனர் என்று தெரிகிறது.

இந்த வியாபாரி, கட்டிடம் கட்டத் தேவையான ஏராளமான சாமான்களை போர்ச்சுகீசிய காலனிகளுக்கு இராணுவப் பாசறைகள் கட்ட அனுப்புகிறார் என்றும், அதை எதிர்த்தே இவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர் என்றும் தெரிகிறது.

## ஆப்பிரிக்கக் கல்லூரி மூடப்படுகிறது

மலானின் இனவெறிக் கொள்கைக்கு எதிர்ப்பு

டாக்டர் மலானின் இனவெறி கொள்கையை எதிர்த்து ரிச்சர்ட் - ரோசவியர் என்னும் பாதிரியார் 26 ஆண்டுகளுக்கு மேலாக மோதர் பூட் என்னுமிடத்தில் உள்ள கல்லூரியையும், உயர்நிலைப் பள்ளியையும் மூடிவிடத் தீர்மானித்து விட்டார்.

"தென் ஆப்பிரிக்க சர்க்காரின் உள்நாட்டமைச்சர், ஆப்பிரிக்க ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொறுப்பை கிருத்தவர்களாகிய எங்களிடம் ஒப்படைக்க மறுக்கிறார் என்னும்போது, கிருத்தவர்களாகிய நாங்கள், கல்விக்காகவோ அல்லது வேறு எந்தப் பிரச்சினைக்காகவோ பயன்படுத்திக் கொள்ளுமாறு, சர்க்காருக்கு நிலம் அல்லது கட்டிடங்கள் எதையும் அளிக்க மாட்டோம்; கடவுளின் விருப்பத்திற்கு எதிரான முறையில் அரசியல் கொள்கைகள், கல்வி முறைகள் போன்றவைகளால் ஆப்பிரிக்க மக்களுக்கு உண்மையான நல்வாழ்வு மறுக்கப்படுகிறது என்று நாங்கள் நம்புகிறோம்; இவர்களின் பிடிவாதம் மிகப் பெரியதாக இருந்தாலும், உலகமனைத்தும் சேர்ந்து செய்யும் பிரார்த்தனையின் மூலம் இவர்கள் மனம் மாறிவிட்டாலும், மூளையாவது மாறும்," என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

தபால்-தந்தி இலாகா, 1953-54ல் மொத்தம் சுமார் 203 கோடி ரூபாய் பெறுமானமுள்ள சுமார் 530 லட்சம் மணியார்டர்களை பட்டுவாடா செய்திருக்கிறது.

# அதிக வரி விதிப்புக்கு எதிர்ப்பு: மக்கள் நடவடிக்கை!

## நகரசபை அலுவலகத்தின் முன் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்!

## மக்களைப் பார்க்க மறுத்துவிட்ட நிர்வாக அதிகாரியின் மமதை!

கல்கத்தா—

ஹௌரா நகரசபை விதிக்கும் வீட்டு வரி முதலியனவும், லைசென்ஸ் கட்டணம் போன்றவையும் அளவுக்கு மீறி அதிகமாயிருப்பதாகக் கூறி, அதை எதிர்க்கும் போக்கில், எண்ணற்ற மக்கள், ஹௌரா நகரசபை அலுவலகத்தின்முன் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர் என்று தெரிகிறது.

நகரத்தின் சில வட்டாரங்களில் வரி விதிப்பு விகிதம் அதிப்படுத்தியிருப்பதையும் தாங்கள் எதிர்ப்பதாக அவர்கள் கூறினார்கள்.

தங்களுடைய குறைகளை எடுத்துக் கூற தங்களின் பிரதிநிதிகள் ஒன்பது பேர்களுக்கு நகரசபை நிர்வாகி பேட்டிதர வேண்டுமென அவர்கள் கோரினர்.

ஆனால் நிர்வாக அதிகாரியோ, நான்கு பேர்களை மட்டுமே தன்னைச் சந்திக்க அனுமதிக்க முடியும் எனக் கூறினாராம்.

இதை ஒப்புக்கொள்ளாத மக்கள், நிர்வாக அதிகாரியை மாடியைவிட்டுக் கீழிறங்கி வந்து தங்களைச் சந்திக்க வேண்டுமெனக் குரல் எழுப்பியிருக்கின்றனர்.

மக்களைக் கீழிறங்கி வந்து பார்க்க அந்த நிர்வாக அதிகாரி மறுத்து விட்டிருக்கிறார்.

பின்னர், வரிவிதிப்பு அதிகமாயிருப்பதை எதிர்த்து ஆர்ப்பாட்டத்திலீடுபட்டிருந்த மக்கள் தங்கள் குறைகளை மனு ஒன்றில் எழுதி அதிகாரிக்கு அனுப்பிவிட்டு, அமைதியாகக் கலைந்து சென்றிருக்கின்றனர்.

### தனிப்பட்ட பள்ளிகளுக்கு சர்க்கார் மானியம்

**திரு-கோச்சி சர்க்கார் இணக்கம்**

திரு-கொச்சி மாநிலத்திலுள்ள பள்ளிகளில் ஒன்று, முதல் மூன்றாம் படிவம் வரை படிக்கும் மாணவர்கள் பள்ளிக்கு கட்டணம் எதும் செலுத்தத் தேவையில்லை என்று முடிவு செய்துள்ளார்கள் அல்லவா?

அதன் விளைவாக, தனிப்பட்டோர் நடத்தும் பள்ளிகளுக்கு வருவாய் குன்றி நட்டம் ஏற்படுவதாக சர்க்காரிடம் முறையிடப்பட்டது.

அதை ஒட்டி, தனிப்பட்ட பள்ளிகள் திறமையுடன் நடைபெற வேண்டுமென்பதற்காக, மாணவர் ஒருவருக்கு வருடத்திற்கு ரூ. 1—15—0 வீதம் தனிப்பட்ட பள்ளிகளுக்கு அரசாங்கம் நஷ்ட ஈடு தரும் என சர்க்கார் அறிக்கை ஒன்றின் மூலம் செய்தி வெளியிட்டுள்ளது.

## நோபல் பரிசு!

இவ்வருடத்திய ரசாயன நோபல் பரிசு, கலிபோர்னியாவைச் சேர்ந்த பஸடானேவிலுள்ள 'கேட்ஸ் அண்ட் செல்லின் கெமிக்கல் லாபரட்டரீஸ்' என்னும் ரசாயன நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் லினஸ் பாலிங் என்பவருக்கு அளிக்கப்படலாம் என்று தெரிகிறது.

இப்பரிசை வழங்க ஸ்வீடன் விஞ்ஞானக் கழகம் முடிவு செய்துள்ளதாகவும், அம்முடிவு கழகத்தினரால் ஊர்ஜிதம் செய்யப்பட வேண்டியதுதான் பாக்கி என்றும் தெரிகிறது.

இவ்வாண்டின் நோபல் பரிசுகள் 4-ல் 3 அமெரிக்காவுக்குத்தான் இத்துடன் சேர்த்துக் கிடைக்கின்றன. ஏற்கெனவே, இலக்கியம் மருத்துவம் ஆகியவற்றிற்கான பரிசும் அமெரிக்காதான் பெற்றுள்ளது.

## காணமற்போன இளவரசர்

**விமான விபத்தில் மாண்டார்**

"பெர்சிய மன்னரின் சகோதரரும், அடுத்த வாரிசுமான இளவரசர் கடந்த புதன்கிழமை கோர்கான் எனும் இடத்திலிருந்து தனது சொந்த விமானத்தில் புறப்பட்டவர் காணப்படவில்லை என்று செய்தி வெளியாகியிருந்ததல்லவா?

இப்போது தெஹ்ரானிலிருந்து 40 மைல் தொலைவில் உள்ள காடு நிறைந்த பகுதியில் விழுந்து நொறுங்கிய விமானத்தருகில் அவரது சடலம் கிடந்ததைக் கண்டு பிடித்துள்ளனர். அவருடன் விமானமோட்டி, ஒரு குடியானவன் ஆகியோரது சவங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அந்தக் குடியானவர், தெஹ்ரானில் உள்ள மருத்துவ மனையில் சிகிச்சை பெறுவதற்காக இளவரசரால் அழைத்துவரப்பட்டாராம்.

இளவரசர், பெர்சிய மன்னர் ஷாவின் பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்வதற்காக வந்து கொண்டிருந்தார்.

இவர் வராமல் போகவே, இவர் புறப்பட்ட விமானத்தை பல பக்கங்களிலும் தேடலாயினர். ஆறு நாட்களுக்குப் பின் நேற்றுத்தான் இவரது சடலத்தைக் காண முடிந்தது.

இவர் இறந்துபட்ட செய்தி கேட்டதும், நாடு முழுவதிலும் துக்கம் கொண்டாடப்படுகிறது. கொடிகள் தாழப் பறந்தன. அரண்மனையில் இளவரசரின் தாயார் அழுத வண்ணமுள்ளாராம். நாடெங்கிலுமிருந்து அனுதாபச் செய்திகள் வந்து குவிந்தவண்ணமுள்ளன.

32 வயதான அலிரீசாவின் சவம் தெஹ்ரானிலிருந்து நான்கு மைல் தெற்கிலுள்ள அரச குடும்ப இடுகாட்டில் இளவரசரின் தந்தை ரீசா ஷாவின் சமாதிக்கருகே புதைக்கப்படும்.

இன்னும் ஒரு வார காலத்திற்கு நாடு முழுவதும் துக்கம் கொண்டாடப்படும் என அறிவிக்கப்படுகிறது.

## வட பர்மாவில் கரேனியர் கலவரம்!

**40 பேர் தூக்கிச்செல்லப்பட்டனர்**

இரங்கூன் நகருக்கு வடகிழக்கே முக்கிய இரயில் நிலையமான மோக்பாலின் என்னும் நகரில் கரேனிய கலகக்காரர்கள் புகுந்து 40 பேரை தூக்கிச் சென்றனர் என்று தெரிகிறது.

தூக்கிச் செல்லப்பட்ட 40 பேரும் அந்த நகரின் முக்கிய மனிதர்கள் என்று தெரிகிறது.

இவர்களைத் தூக்கிக் கொண்டு சித்தாங் நதிக்கு அப்பால் உள்ள காட்டிற்குச் சென்றார்களாம்.

இதற்கு முன்னர் இக்கொள்ளைக் கூட்டத்தினர் நகரில் ஏராளமான பொருள்களைக் கொள்ளையடித்தனர் என்று தெரிகிறது.

வடக்கு தென்கரைன், கிழக்கு பர்மா ஆகிய பகுதிகளில் 1,800 சதுர மைல்களில் இந்தக் கரேனியர்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனா. இவர்கள் தனி நாடு கேட்டு 1948 முதல் கிளர்ச்சி செய்கின்றனர். சர்க்கார் இவர்களை அடக்கிவிட்டது என்றாலும் கரேனியர்களின் சில கூட்டத்தினர் இன்னும் போராடுகிறார்கள் என்று கூறப்படுகிறது.

## ராஷ்டிரீய சேவா சங்கத்தின் மறுபதிப்பே 'ஜனசங்'

**விலகிவிடப் போவதாக தலைவர் அறிவிப்பு**

'ஜன சங்' இயக்கத்தின் தலைவரான மௌலி சந்திர சர்மா, தான் 'ஜன சங்' தலைமையிலிருந்து விலகிக் கொள்வது பற்றி யோசித்துக் கொண்டிருப்பதாக கூறியுள்ளாராம்.

ஏற்கனவே இந்த இயக்கத்தின் தலைவர்கள் பலர், உ. பி. உப தலைவர், பஞ்சாப் தலைவர், டெல்லி உப தலைவர் ஆகியோர்—'ஜனசங்' இயக்கத்திலிருந்து விலகிவிட்டனராம்.

இவர்கள்எல்லாரும் இயக்கத்தை விட்டு வெளியேறுவதற்குக் காரணமாகக் கூறுவதெல்லாம், "'ஜன சங்' தனது ஜனநாயக அமைப்பு முறையை இழந்துவிட்டது; மேலும், அதில் 'ராஷ்டிரீய சேவா சங்க'த்தினரின் ஆதிக்கம் வலுத்துவிட்டது," என்பது தான்.

டெல்லி நகரசபைத் தேர்தலில், 'ஜனசங்,' கட்சி, இரண்டாவது பெரிய கட்சியாகிற அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது!

## பகவல்பூரில் மந்திரி சபை கலைக்கப்பட்டது

**அரசியல் நிர்ணய சபையை மூடியதின் எதிரொலி!**

கராச்சி, நவ. 2—

பகவல்பூர் சமஸ்தானத்தின் மன்னர், பகவல்பூர் சமஸ்தான மந்திரி சபையையும் சட்ட சபையையும் கலைத்துவிட்டு, சமாஸ்தானத்தின் எல்லா அதிகாரங்களையும் தமது ஆலோசகரான ஏ. ஆர். கானிடம் ஒப்படைத்திருக்கிறார்.

மன்னரின் பிரகடனத்தில், அரசியல் திட்டப்படி நிர்வாகத்தை நடத்த முடியாத நிலை ஏற்பட்டு விட்டதாகவும், பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டதையொட்டியே பகவல்பூர் சமஸ்தான, மந்திரி சபைகள் கலைக்கப்படுகின்றன என்று காணப்படுகிறது.

கலைக்கப்பட்ட மந்திரி சபையின் பிரதமராக சையத் ஹஸன் மஹ்மூத் இருந்துவந்தார்.

ஏ. ஆர். கான், தம்மிடம் எல்லா பொறுப்புகளும் விட்டுக்கொடுக்கப்பட்டதும் புதிய மந்திரி சபையை அமைத்திருக்கிறார்.

புதிய மந்திரிசபையின் பிரதமர், எந்த அதிகாரியாவது லஞ்சக் குற்றங்களிலீடுபட்டால் அவரை ஒழித்துக் கட்டிவிடப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளாராம்.

★

**பாக். சர்க்கார் நோக்கம்**

எல்லா சமஸ்தானங்களையும் மேற்குப் பாகிஸ்தானின் பக்கத்திலுள்ள மாநிலங்களுடன் இணைப்பதே புதிய பாகிஸ்தான் சர்க்காரின் நோக்கம் என்றும், பகவல்பூர் மந்திரி சபையும், சட்ட சபையும் கலைக்கப்பட்டது இந்நோக்கத்திற்கான முதல் நடவடிக்கை என்றும் பாக். அரசாங்கம் கருதுவதாகத் தெரியவருகிறது.

★

## பகவல்பூரைப் பின்பற்றி...

பகவல்பூர் சமஸ்தானத்தில் நடைபெற்றுள்ளது போன்றே 3,20,000 மக்கள் தொகையுடைய கைர்பூர், 2,82,945 மக்கள் தொகையுடைய காலட் ஆகிய சமஸ்தானாதிபதிகளும் சட்ட சபைகளைக் கலைத்துவிட்டு, பாகிஸ்தான் அரசாங்கம் நியமிக்கிற ஆலோசகர்களைக் கொண்டு நிர்வாகத்தை நடத்துவர் எனச் செய்திகள் கூறுகின்றன.

# மக்களே அமுல்செய்யும்மதுவிலக்கு

## ஆந்திரா கிராமத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுக்க நடவடிக்கை!

ஏலூரு, நவ. 3—

கள்ளச் சாராயம் காய்ச்சுவதில் பெயர்போன ஒரு கிராமத்தில் இப்போது மதுவிலக்கு பூரணமாக அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாம்.

'அகதலங்கா' என்ற அந்த கிராமத்தில் உள்ள மக்களில் பெரும்பான்மையினர் அரிசனங்களாம். அவர்கள் எல்லோரும் கடந்த 15-ந் தேதியன்று ஒன்றாகக் கூடி கள்ளத்தனமாக திருட்டுச் சாராயம் காய்ச்சுவதை நிறுத்திவிடுவது என முடிவு செய்தனர்.

எட்டு இளைஞர்களைக் கொண்ட குழு ஒன்றை நிறுவி, வீடுகளில் புகுந்து சோதனையிடுவது, குடிபோதையிலிருப்பவர்களைக் கண்டு பிடிப்பது போன்ற அதிகாரங்களையும் அந்தக் குழுவினருக்குத் தந்தனர்.

தனிப்பட்டவர் ஒருவர் குடித்திருந்தால் அவருக்கு 10 ரூபாய் அபராதம்; கள், அல்லது சாராயம் வைத்திருந்தால் அபராதம் ரூ. 25; கள்ளச் சாராயம் இறக்கும் சாதனங்கள் வைத்திருப்பவருக்கு ரூ. 50;—இவ்வாறு அபராதம் விதிக்கவும் குழுவிற்கு அந்த மக்கள் அதிகாரம் அளித்துள்ளனராம்.

கடந்த 15நாட்களில் குழுவினர், 4 பேர் குடித்திருந்ததையும், ஒருவர் கள்ளச சாராயம் வைத்திருந்ததையும், இன்னுமொருவர் கள்ளச் சாராயம் காய்ச்சியதையும் கண்டு பிடித்து மேற்கண்டபடி அபராதம் விதித்தனர். அந்த அபராதத் தொகை முழுதும், கிராமப் பொது அபிவிருத்தி நிதிக்குச் சேர்க்கப்பட்டதாம்.

ஏற்கனவே ஆந்திர மாநிலத்தில் மதுவிலக்குச் சட்டம் அமுலிலிருப்பதும், மதுவிலக்கு ஆந்திராவில் தோற்றுவிட்டது என்று ராமமூர்த்தி விசாரணைக் குழு அறிவித்திருப்பதும், அதன்படி, மதுவிலக்கைக் கைவிட வேண்டுமென கம்யூனிஸ்டுகள் உட்பட பலரும் ஆந்திர அரசாங்கத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தி ராமமூர்த்தி குழுவின் தீர்ப்பை அமுல் செய்வது என்ற சட்டசபையின் முடிவை அமுல் செய்யக் கோரி வருவதும் நினைவிலிருக்க வேண்டும்.

## நேருவின் புத்தகத்திற்குத் தடை!

தெற்கு ரொடீஷியாவில், பண்டித நேரு, முன்னர் ஆப்பிரிக்க மக்களைப் பற்றிப் பேசிய சொற்பொழிவுகளைத் தொகுத்து எழுதப்பட்ட சிறு புத்தகங்களை விற்பனை செய்தனர் என்று தெரிகிறது.

இப்புத்தகத்தை விற்பனை செய்வது, வெளியிடுவது, அச்சடிப்பது ஆகிய அனைத்திற்கும் தென் ரொடீஷிய சர்க்கார் தடைவிதித்துள்ளனர்.

இதுபற்றிக் குறிப்பிடுகையில், இந்த நூல் மக்களிடையே வெறுப்பையும், துவேஷத்தையும் தூண்டிவிடும் என்பதின் காரணமாகவே தடை செய்யப்பட்டதாக தென் ரொடீஷிய நிதி இலாகா அமைச்சர் கூறியுள்ளார்.

### முன்னாள் இராணுவ அதிகாரி தேடப்படுகிறார்!

**2,000 பவுன் தருவதாக எகிப்து சர்க்கார் அறிவிப்பு**

எகிப்து இராணுவத்தின் முன்னாள் அதிகாரி ஒருவரையும், இஸ்மாலியா வியாபாரி ஒருவரையும் எகிப்து போலீசார் நாடு முழுமையும் தேடுகிறார்கள்.

இவர்கள் இருவரும் முஸ்லிம் சகோதர உறவுக் கழகத்தின் 'இரகசியப் பயங்கரப் படை'யினைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

லெப்டினெண்ட் அப்துல் மோனியம் என்னும் அந்த முன்னாள் இராணுவ அதிகாரியையும், யூசுப் தின் முகமது தாலத் என்னும் வியாபாரியையும் பற்றித் தகவல் கொடுப்போருக்கு இரண்டாயிரம் பவுன்கள் அளிக்கப்படும் என்று எகிப்திய சர்க்கார் பிரகடனம் செய்துள்ளனர்.

## தமிழ்நாடு காங்கிரஸ் தேர்தல்

**பலத்த போட்டி**

புதுக்கோட்டை பிரதேச காங்கிரஸ் குழு தேர்தலில், புதுக்கோட்டை மாவட்ட காங்கிரசிலிருந்து 4 பேர் அபேட்சகர்களாக நிற்கின்றனர். இவர்களுக்குப் போட்டியாக வேறு யாரும் இல்லாமையால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுவர்.

பொன்னமராவதி தொகுதியில், மாவட்ட காங்கிரஸ் குழு தலைவர் பி. ராமையா, திருமயம் தொகுதியில் எம். முத்துவைர அம்பலம், கீரனூர் தொகுதியில் மீனாட்சிசுந்தரம், ஆலங்குடி தொகுதியில் ஆர். நடேசன் ஆகிய நால்வருமே, மேற்படி போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்படுவோர் ஆவர்.

புதுக்கோட்டை நகருக்கு கே. என். லட்சுமண அய்யர், டி. விஜயரகுநாதன் ஆகியஇருவரும்போட்டியிடுகின்றனர்.

திருச்சி மாவட்டத்திலுள்ள 25 இடங்களுக்கு 81 பேர் போட்டியிடுகின்றனா .பரமத்தி பிர்க்கா பூகளூர் தொகுதிக்கு எம். மருதமுத்துப் பிள்ளையும், கோம்ரசவல்லி பிர்க்கா, தருமலைவாடி தொகுதிக்கு டி. கே. சுப்பையாவும், எதிர்ப்பின்றி போட்டியிடுவதால் அவர்களே தேர்ந்தெடுக்கப்படுவர்.

**தஞ்சாவூரில் 30 இடங்களுக்கு 111 பேர் போட்டி**

தஞ்சாவூர் மாவட்டத்தில், த. நா. காங்கிரஸ் குழுவில் உள்ள 30 காலி இடங்களுக்கு 111 பேர் போட்டியிடுகின்றனராம்! சீர்காழி நகர தொகுதிக்கு எஸ். பாலசுப்பிரமணிய பிள்ளையும், அறந்தாங்கி தாலுகா பொன்பேத்தி தொகுதிக்கு ஏகாம்பர சேர்வையும் எதிர்ப்பின்றி போட்டியிடுவதால் அவர்களே தேர்ந்தெடுக்கப்படுவர்.

பாபநாசம் தாலுகா, பாபநாசம் தொகுதிக்கு பி. தியாகராஜ கடவராயரும், சாலியமங்கலம் தொகுதிக்கு ஏ. கிருஷ்ணசாமி வாண்டையாரும் போட்டியின்றிதேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**கலந்து கொள்ளாதே!**

சென்னை, நவ. 2—

திருச்சி நகரசபைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு தமிழ் நாட்டுக் காங்கிரஸ் குழுவின் முன் அனுமதி பெறப்படவில்லையாதலால், அதில் யாரும் கலந்து கொள்ள வேண்டாமென்று, த. நா. கா. குழு தலைவர் எல். எஸ், கரையாளர், திருச்சி நகரசபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்குத் தாம் அனுப்பியிருக்கிற கடிதமொன்றின் மூலம் கேட்டுக்கொண்டிருக்கிறாராம்.

### திருமணம்

29—10—54ல், பழையவத்தலகுண்டில், தோழர் ஆர். பி. தங்கவேலு—தோழியர் தனலட்சுமி வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ.1நன்கொடையளிக்கப்பட்டது — வரப்பெற்றோம் — நன்றியுரியது—பொறுப்பாளர்.

# பி. சோ. கட்சியில் குழப்பம்

## கிருபளானி தரும் விளக்கம்

**நேருவின் சீனச் செலவு சரித்திர முக்கியத்துவமானதா?**

கல்கத்தா, நவ. 3—

பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சியின் பெரும்பான்மையினரின் முடிவுகளை, பகிரங்கமாகக் கண்டித்து, கட்சியிலுள்ள சில முக்கிய தலைவர்கள் பல குழப்பங்களை உண்டுபண்ணிவருவதாக, பி. சோ. கட்சித் தலைவர் ஆச்சாரியா கிருபளானி கூறியுள்ளார்.

இதற்குக் காரணம் கூறுகையில், "கட்சிக்குள்ளே தகராறுகள் இருந்தாலும், கொள்கையைப் பொறுத்தமட்டில் எவ்வித பேதங்களும் கிடையாது. ஆனால், திரு—கோ. துப்பாக்கிப் பிரயோகம் போன்ற சில குறிப்பிட்ட சம்பவங்களைப் பற்றித்தான் கட்சியின் முக்கிய மானவர்களிடையே பலத்த அபிப்பிராயபேதங்கள் ஏற்பட்டுள்ளன," என்று தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், ஜனநாயக அரசியல் முறைப்படி, பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சி என்பது முக்கியமான உறுப்பாகும் என்றும், தமது, கட்சிஅரசாங்கத்தை எதிர்த்தாலும் கூட, அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் வருமென்றும், இதுபோன்ற சந்தர்ப்பமே, தாம் ரயில்வே ஊழல் விசாரணைக் குழுத் தலைவர் பதவி ஏற்றது என்றும் குறிப்பிட்டார். பி. சோ. கட்சியிலுள்ள யாருமே காங்கிரசில் திரும்பச் சேர்ந்துகொள்ளும் உத்தேசத்தில் இல்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

**நேருவின் சீனப் பயணம் பற்றி....**

"சீனப் பிரதமர் சௌ-என்-லாய் இந்தியாவுக்குத் தந்த வருகையை, சீன மக்கள் ஒரு 'சரித்திர முக்கியத்துவம்' வாய்ந்ததாகக் கருதாதபோது, நாம் மட்டும், நேருவின் சீன வருகை 'சரித்திர முக்கியத்துவம்' பெற்றுள்ளது என்று ஏன் கருதிக்கொள்ளவேண்டும்?" என்று தோழர் கிருபளானி கேட்டாராம்.

வேண்டுமென்பது சரியானதல்ல; இப்போது ஜனசங்கத்தில் ஏற்பட்டுள்ள புதி" ஆதிக்கம், அதில் உள்ள ஜனநாயகச் சிறப்புகளை அழித்துவிடும் என்று கூறுவேன்.

(முன்பு வந்த செய்தி 3-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.)

## நஷ்ட ஈடு!

கடந்த ஜூலையில் ஹைனன் தீவுகளுக்கப்பால் பறந்துகொண்டிருந்த பிரிட்டிஷ் விமான மொன்றை சீன விமானங்கள் சுட்டு வீழ்த்திவிட்டனவல்லவா?

அந்த பிரிட்டிஷ் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதினால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுகட்டும் வகையில், சீன அரசாங்கம் 3,67,000 பவுன் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குத் தருவதாக ஒப்புக்கொண்டுள்ளதெனச் செய்தி வெளியாகியுள்ளது.

## 'ஜன சங்' தலைவர் இராஜினமா!

**ஆர். எஸ். எஸ். ஆதிக்கம் வலுத்துவிட்டதெனக் குற்றச்சாட்டு!**

### வட இந்தியக் கட்சியில் குழப்பம் அதிகரிக்கிறது

புதுடில்லி, நவ. 3—

'பாரதீய ஜனசங்கம்' என்ற வட இந்தியக் கட்சியின் தலைவர் பண்டிட் சந்திர சர்மா தனது பதவியை இராஜினமாச் செய்துவிட்டார்.

"இக்கட்சியில் ஆர். எஸ். எஸ். கட்சியினர் நுழைந்து ஆதிக்கம் செலுத்துகின்றனர் என்றும், எனவே, ஜனசங்கம் இனிமேல் ஜனநாயகப் பண்புடனோ மத சார்பற்ற இயக்கமாகவோ இயங்க முடியாது," என்றும் இராஜினமா செய்துள்ள சர்மா அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

இவர் நீண்ட காலமாக ஜனசங்கத்தின் முன்னேற்றத்திற்கென உழைத்தவர் ஆவார்.

அவர் தமது அறிக்கையில் கூறுவதாவது:—

"கடந்த ஒரு ஆண்டு காலமாக ஆர். எஸ். எஸ்.-காரர்களின் ஆதிக்கம் அதிகமாகிவிட்டது. அவர்கள் கலாசார ஸ்தாபனத்தினர்தான் என்றும், எக்கட்சியிலும் சேர்ந்து கொள்ள அவர்களுக்கு உரிமை உண்டென்றும் கூறப்பட்டது; ஆனால், நடைமுறையில், உண்மை அதுவென்று தோன்றவில்லை; ஒழுங்காகத் திட்டமிட்டு, தீவிரமாக, ஆர். எஸ். எஸ். கட்சியினர் ஜனசங்கத்தில் நுழைந்தனர்; நான் சென்ற ஆண்டிலேயே ஜனசங்கத்தின் இரண்டு அடிப்படைக் கொள்கைகளான ஜனநாயகத்தில் நம்பிக்கை, மதசார்பற்ற தேசீயம் ஆகிய இரண்டும் அவசியம் என்று வற்புறுத்தினேன்; நான், நேருவின் சாதனைகளைப் புகழ்கிறேன் என்று குற்றம் சாட்டினார்கள்; எதிர்க்கட்சியினரை காரணமின்றி எதிர்க்க

# கழகக் கூட்டங்கள்

★

**செங்கற்பட்டு**

தர்க்கா திடலில்

**6—11—54 மாலை 6 மணிக்கு**

பேசுவோர்:

சி. என். அண்ணதுரை

அ. பொன்னம்பலனர்

முகவை ஆர். எஸ். பாண்டியன்

ஏ. எஸ். இமயவரம்பன்.

★

**பெத்தநாய்க்கன்பாளையம்**

கோட்டக்கரை மாரியம்மன் கோவில் முன்

**6—11—54 இரவு 7 மணிக்கு**

தலைவர்: ப. அன்பழகன்

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

எம். பி. சுப்ரமணியம், எம்.எல்.ஏ.

ஏ. ஆனைமுத்து

★

**எடப்பாடி**

**6—11—54 மாலை 6 மணிக்கு**

தலைவர்: பா. பண்டரிநாதன்

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

★

**ஆமதாபாத்**

தி. மு. கழக நான்காம் ஆண்டு நிறைவு விழா

நவம்பர் 7, 8, 9 தேதிகளில்

பேசுபவர்:

எம். எஸ். இராமசாமி

# திரு-கொச்சி பி. சோ. கட்சியில் உடைப்பு?

## பட்டம் ஆட்சி மீது 40 நிபந்தனை!

### விவாதிக்க மறுத்து பட்டம் வெளியேற்றம்

திரு—கொச்சி பிரஜா – சோஷலிஸ்டுக் கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டம், மீண்டும் கட்சிக் காரியாலயத்தில் சமீபத்தில் நடைபெற்றது. கட்சித் தலைவரும், முதலமைச்சருமான பட்டம் தாணு பிள்ளை, முற்பகல் 11 மணிக்கு வந்து, கூட்டத்தில் கலந்துகொண்டார்.

கூட்டத்தில், உறுப்பினர்கள் யாவரும் ஒருவருக்கொருவர் காரசாரமாக விவாதித்தனராம்.

திரு—த. நா. கா. மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள், போலீஸ் அராஜகம், வனம் கண்டிராக்ட் விவகாரம் ஆகியவைகளைக் கண்டித்து உறுப்பினர்கள் யாவரும் காரசாரமாகப் பேசினராம்!

கட்சியை லட்சியம் செய்யாமல், மந்திரி சபை, தன் போக்கிலேயே போய்க் கொண்டிருக்கிறதென்று கூட்டத்தில் பலமாகப் புகார்கள் கிளம்பியதாகவும் கூறப்படுகிறது. 40 ஷரத்துக்களடங்கிய மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்து அதன்படி தீர்மானம் செய்யப்பட வேண்டுமென்று, உறுப்பினர்கள் பலமான முறையில் விவாதித்தார்களாம்!

**பட்டத்தின் ஓட்டம்!**

உறுப்பினர்களின் வார்த்தைகள் பட்டத்தையும் அவரது கூட்டு மந்திரிகளையும் கொதிப்புறச் செய்ததின் விளைவாக உடனே, பட்டம் தாணு கோபம் கொண்டு கூட்டத்தை விட்டு வெளியேறி விட்டதாகவும், அவரைத் தொடர்ந்து மந்திரி அச்சுதனும் வெளியேறினார் என்றும் தெரிகிறது.

திருச்சூரும் கோட்டயமும் ஒன்றாக இணைந்து பட்டம் மந்திரி சபைக்கு எதிராக விவாதித்து வருகின்றன. '40 நிபந்தனைகளையும் அங்கீகரிக்காமல், மந்திரி சபை, தனது பதவியில் இருக்க வேண்டியதில்லை' என்பது குறித்துத்தான் கடுமையான விவாதம் நடத்தி வருகிறது.

பட்டமும், அச்சுதனும் மீண்டும் மாலை 7 மணிக்குத்தான் கூட்டத்தில் வந்து கலந்துகொண்டனர். இரவு 10-30 மணிவரை கூட்டத்தில் எவ்வித முடிவும் ஏற்படவில்லை.

பி. சோ. கட்சி எம். எல். ஏ.-க்களான மஞ்சுனாத பிரபுவும் வயலா இடிகுலாவும் தங்கள் கட்சிப் பார்லிமெண்டரி உறுப்பினர் பதவியைத் துறக்கத் தீர்மானித்துவிட்டதாகவும், அவர்கள் தனியாக ஒரு கட்சியை உருவாக்கப் போவதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

### தொழிலாளர் பகுத்தறிவுப் படிப்பக முதலாவது ஆண்டு விழா

6—11—54 சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு திருப்பூர் வாலிபாளையம், பழைய ரேடியோ மைதானத்தில், தொழிலாளர் பகுத்தறிவுப் படிப்பக முதலாவது ஆண்டு விழா தோழர் கு. ராமசாமி தலைமையில் நடைபெறும். தோழர் மதுரை எஸ். முத்து பேசுவார்.

### சொற் பயிற்சிக் கூட்டம்

6—11—54 இரவு 9 மணிக்கு சென்னை 50-வது வட்ட தி. மு. கழக மனையில் 'திராவிடர் நாகரீகம்' என்னும் பொருள் பற்றி தோழர் ஏ. சந்தானம் தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

### 'எங்கே இன்பம்?'—நாடகம்

5—11—54 மாலை 6 மணிக்கு சென்னை, செயின்ட் மேரீஸ் மண்டபத்தில், தட்சிண ரயில்வே தமிழ்க் கலை மன்றத்தார் அளிக்கும் 'எங்கே இன்பம்?' என்னும் நாடகம், நிதி மந்திரி திரு. சி. சுப்ரமண்யம் தலைமையிலும், நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் முன்னிலையிலும் நடைபெறும்.

# எல்லா நிபுணர்களும் பூரண யோக்கியதாம்சம் பெற்றவர்களாக இல்லை

## ரஷ்ய தொழில் நுட்ப உதவியை வரவேற்கிறோம்!

### தனிப்பட்டவர் சொத்துக்களை நஷ்டயீடின்றி பறிக்கமாட்டோம்!

வெளிநாட்டு நிருபர் கூட்டத்தில் வர்த்தக மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி அறிவிப்பு

"இதுவரையிலும், இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுள்ள அன்னிய நாட்டுத் தொழில் நிபுணர்களில் எல்லோருமே பூரண யோக்கிய தாம்சம் பெற்றவர்களாக இல்லை. ஒரு நாட்டிலிருந்து, பொதுவாக, நான்கு நிபுணர்கள் வந்தால், அவர்களில் ஒருவர் பூரண யோக்கிய தாம்சம் பெற்றவராக இருப்பார்; மற்றொருவர் சுமாராகத்தான் இருப்பார்; மற்றும் இருவர் ஒன்றுக்கும் லாயக்கற்றவர்களாகவே இருப்பர். ஐ. நா.-வின் தொழில் நுட்ப திட்டத்திலுள்ள குறை என்னவென்றால், அனுப்பப்படுகிற தொழில் நுட்ப நிபுணர் திறமையுடையவரா அல்லது திறமை குன்றியவரா என்று ஆராய்ந்து பார்க்காமல் ஐ. நா.-வினர், ஏதாவது ஒரு நாட்டிலுள்ளவரை அனுப்புவார்கள்."

—இவ்வாறு, இந்திய சர்க்கார் தொழில், வர்த்தக அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, டில்லியில் வெளி நாட்டுப் பத்திரிகை நிருபர்கள் சங்கம் தனக்களித்த விருந்தொன்றின்போது பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவர் கூறியதாவது:—

"ஓரளவுக்காவது பிறநாட்டவரின் உதவியில்லாமல், தனது தொழில் வளர்ச்சித் திட்டத்தை நடத்த முடியாது என்பதை இந்திய சர்க்கார் உணர்ந்துகொண்டுள்ளது; எந்த நேசநாட்டினிடமிருந்தும் நாம் உதவிபெறத் தயார்; ஆனால், அதற்கு எவ்வித நிபந்தனையும் இருக்கக் கூடாது.

"இந்தியாவுக்கு ரஷியா தருவதாக உறுதியளித்துள்ள உதவி, ஐ. நா. தொழில் நுட்ப உதவித் திட்டம் மூலமாகவே கிடைக்கும்.

"ரஷியாவிலிருந்து தொழில் நுட்ப உதவி நமக்குக் கிடைத்து, அதற்கு எவ்வித நிபந்தனையும் விதிக்கப்படாமல் இருக்குமானால் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயார். ரஷியாவிலிருந்து கிடைக்கவிருக்கும் தொழில் நுட்ப உதவி மிகவும் உபயோககரமானதாகும். ரஷிய மக்கள், பிறநாட்டினர் எவருடைய உதவியுமின்றி எல்லா விஷயங்களையும் கற்றுக்கொண்டதால், அப்படிப்பட்ட ஒரு நாட்டினரிடமிருந்து கிடைக்கும் உதவி மிக உபயோகமுள்ளதாகவே இருக்கும் என்று ஒவ்வொரு இந்திய மகனும் கருதுகிறான்."

**நஷ்ட ஈடு**

சொத்துரிமை பற்றிய அரசியல் திட்டத்துக்குத் திருத்தம் கொண்டு வரும் சர்க்கார் உத்தேசம் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் தெரிவித்ததாவது:—

"நஷ்ட ஈடு தராமல், எந்த ஒரு சொத்தையும் எடுத்துக் கொள்ள சர்க்கார், அரசியல் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவர யோசிக்கவில்லை. மாறாக, அரசாங்கத்தின் ஒழுங்குபடுத்தும் அதிகாரங்களைப் பாதுகாப்பதே அத்திருத்தங்களின் நோக்கமாகும். அந்தத் திட்டத்தில் தனி நபருக்கு அளிக்கப்பட்டுள்ள உத்திரவாதங்களை மீறும் உத்தேசம் இல்லாமல், க்ஷேம நல அரசாங்கம் ஏற்படுத்த அவசியமான அதிகாரங்கள் பெறவே சர்க்கார் விரும்புகிறது.

"எந்த ஒரு சொத்தையும் சர்க்கார் எடுத்துக் கொண்டால், அதற்கு நஷ்டயீடு தரப்பட வேண்டு'மென்பதை சர்க்கார் உணர்ந்து கொண்டுள்ளது.

"தனிப்பட்டோரின் சொத்துக்களை இந்நாடு அடியோடு ஒழித்துவிடப் போகிறது என்று, மற்றைய நாடுகளில் உள்ளவர்கள் நினைத்துக் கொண்டுவிடக் கூடாது. க்ஷேம நல அரசாங்கத்தின் முக்கிய இலட்சியங்களை மேலும் வலுப்படுத்துவதற்காகவே அரசாங்க அதிகாரங்கள் குலையாமல் இருக்கவேண்டும்."

## மு. கருணாநிதி

**நிகழ்ச்சிகள்**

★

நவ. 7 வேலூர்

14 அண்ணாமலைநகர்

21 சேலம்

23 மதுரை

டிச. 5 சென்னை

12 சூளை

19 கோமளீஸ்வரன் பேட்டை

### சென்னை மாவட்ட தி.மு.கழக. உறுப்பினர்களுக்கு

6—11—54 மாலை 6 மணிக்கு 'அறிவகத்'தில், சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். பல முக்கிய பிரச்சினைகள் குறித்து முடிவெடுக்க வேண்டியிருப்பதால், மாவட்ட உறுப்பினர்கள் எல்லோரும் தவறாது வருகைதர வேண்டுமென விழைகின்றேன், என்று, மாவட்டச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் அறிவிக்கிறார்.

## பாரசீகத்திற்கு அமெரிக்க உதவி

**ரூ. 57 கோடி அளிக்கப்படும்**

பாரசீகத்திற்கு அமெரிக்கா ரூ. 57 கோடி வரையில் உதவி செய்யுமென்று தெரிகிறது.

இந்த உதவியில் ஒரு பகுதி நேரடியான பொருளாதார உதவியாகவும், மற்ற பகுதி ஏற்றுமதி - இறக்குமதி பாங்கிக்கு கடன் தருவதன் மூலமும் அளிக்கப்படும் என்று தெரிகிறது.

கடன் உதவி பெறுவதற்கு பாரசீகப் பாராளு மன்றத்தின் அனுமதியை தெஹ்ரான் சர்க்கார் சீக்கிரமே பெறுவார்கள் என்று தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.